# திருவரங்கத்தமுதனார்
# அருளிச் செய்த ப்ரபந்ந காயத்ரி என்னும்
# இராமானுச நூற்றந்தாதி




## பாசுரம்-74

தேரார் மறையின் திறமென்று மாயவன் தீயவரைக்
கூராழிகொண்டு குறைப்பது; கொண்டலனைய வண்மை
ஏரார் குணத்தெம் மிராமானுசன் அவ்வெழில் மறையில்
சேராதவரைச் சிதைப்பது அப்போதொரு சிந்தை செய்தே.

**பாசுரக் கருத்து**

சர்வேஸ்வரன் தனது ஆனைகளை மீறுபவர்களை, பல அவதாரங்கள் எடுத்தும், ஆழி கொண்டு அழித்தது போன்று அல்லாமல், இராமானுசர், தான் உபதேசித்த ஞானத்திற்கு, எத்ராக நிற்பவர்களை ஒரு யுக்தி மூலம் வீழ்த்தினார் என்று கொண்டாடுகிறார் இப்பாசுரத்தில்.

**பதவுரை**

**அப்போதொரு சிந்தை செய்தே:**
புதிது புதிதாக தோன்றி விளங்கும் அறிவு 'ப்ரதிபை' என்றபடி இங்கே கூறப்பட்ட சிந்தையை ப்ரதிபை என்று உணர வேண்டும்.

**பாசுர அர்த்தம்**

வேதம் கூறும் வழியைத் தேர்ந்து கொள்ளாத தீயவர்களை, எம்பெருமான் தன் கூர்மையான சக்கரத்தாலே தண்டிக்கிறான். ஆனால்,மேகத்தை போன்ற ஈகைத் தன்மை உடைய எம்பெருமானாரோ, தம் நல்ல குணத்தால் வேதப் பொருளைத் தெரியாதவர்களை ஒவ்வோர் உண்மை விளக்கத்தாலே தலைக் குனியச் செய்து, அறிவுறுத்தி உய்விப்பார்.

**பாசுரம்-75**

செய்த்தலைச் சங்கம் செழுமுத்தமீனும் திருவரங்கர்
கைத்தலத் தாழியுஞ் சங்கமுமேந்தி நங்கண் முகப்பே
மொய்த்தலைத்துன்னை விடேனென்றிருக்கிலும் நின்புகழே
மொய்த்தலைக்கும் வந்து இராமானுச! என்னை முற்றும் நின்றே.

**பாசுரக் கருத்து**

இப்பாசுரத்தில் பகவான் த்ன் அழகனைத்தையும், புலப்படுத்திக் கொண்டு, கண்ணெதிரே வந்து உன்னை விடேன் என்றிருந்தாலும், தேவரீர் குணங்களே வந்து போட்டியிட்டு என்னை ஈடுபடும்படி செய்யும் என்கிறார்.

**பதவுரை**

**கைத்தலத்தாழியும் சங்கமுமேந்தி:**
தம்மை உள்ளபடி காட்டக் கண்ட திருப்பாணாழ்வார்க்கு, கையினார் சுரிசங்கனலாழியராய் திருவரங்கர் சேவை சாதித்தது போல், அடியேனுக்கும் சேவைதரினும் ஈடுபடேன் என்கிறார்.

## பாசுர அர்த்தம்

சங்குகளிலிருந்து செழிமையான முத்துக்கள் தோன்றும் வயல்கள் உள்ள திருவரங்கத்தில் எழுந்தருளிய பெருமான், தன் கையில் திருவாழி திருச் சங்குகளைக் கொண்டவனாய் தன் அழகாலே கண் எதிரிலே நின்று வலியப் பற்றுகிறான். என்றாலும் அதனால் சிந்தை தடுமாறாமல், தேவரீர் குணத்தில் ஈடுபடுகிறேன் என்பதை விட உம்முடைய திவ்ய குணங்களே என்பக்கம் சூழ்ந்து கவர்கின்றன. இராமானுசரே உம் அருள் தான் என்னே.

## பாசுரம்-76

நின்ற வண்கீர்த்தியும் நீள் புனலும் நிறை வேங்கடப் பொன்
குன்றமும் வைகுந்த நாடும், குலவிய பாற்கடலும்
உன் தனக்கு எத்தனை இன்பம் தரும் உன் இணைமலர்த்தாள்
என் தனக்கும் அது; இராமானுச! இவை ஈந்தருளே.

**பாசுரக் கருத்து**

இப்படியாக தன் இடத்திற்கு வந்து கடாக்ஷித்த எம்பெருமாரிடம், அமுதனார், தேவரீருக்கு விருப்பமான திருவாய்மொழி,தண்ணார் வேங்கடம் என்றும், திருப்பாற்கடல் போன்றும் உள்ளவை, எத்தனை ஆனந்தத்தை ஏற்படுத்துமோ,அது போன்று தேவரீருடைய எல்லையற்ற திருவடிகளும் அத்தகிய ஆனந்தத்தை ஏற்படுத்துவதால், அவற்றை அளித்தருள வேண்டும் என்கிறார்.

## பதவுரை

இவை ஈந்தருளே:

எனக்கு ஏற்ற புருஷார்த்தம் என்பது தேவரீர் திருவடிகளே என்ரு உணர்ந்த பின்னர்,அவற்றை நீரே, அடியேனுக்கு அளித்தருள வேண்டும்.

## பாசுர அர்த்தம்

இராமானுசா! புகழ் நிலை பெற்றதும், நீர் வளமும் உடைய திருவேங்கட மலையும், ஸ்ரீ வைகுந்த நாடும், கொண்டாடப்படும் பாற்கடலும்,தேவரீருக்கு எவ்வள்வு மகிழ்ச்சியை உண்டாக்குமோ,அவ்வளவு தேவரீருடைய , இணைத்திருவடித் தாமரைகளும் அடியேனுக்கு ஈந்தருள வேண்டும்.

## பாசுரம்-77

ஈந்தனன் ஈயாத இன்னுருள்* எண்ணில் மறைக்குறும்பைப்
பாய்ந்தனன் அம்மறைப் பல்பொருளால்* இப்படியனைத்தும்
ஏய்ந்தனன் கீர்த்தியினால்* என் வினைகளை வேர்பறியக்
காய்ந்தனன்* வண்மையிராமானுசற் கென் கருத்தினியே.

## பாசுரக் கருத்து

அமுதனார் கேட்டபடியே திருவடிகளை இராமானுசர் ஈந்தருள, அவைகளைப் பேற்று, க்ருதார்த்தராய், அவர் செய்த உபகாரங்களை அநுஸந்தித்து, இவையெல்லாம் செய்த பின்பு, இனிச் செய்யப் போவது ஏதோ என்கிறார்.

## பதவுரை

**ஈந்தனன் ஈயாத இன்னருள்:**

இதுகாறும் வேறொருவருக்கும் கிடைக்காத இன்னருள், தமக்கு கிடைத்தமையால் ஈயாத இன்னருள் ஈந்தனன் என்கிறார்.

## பாசுர அர்த்தம்

எவர்க்கும் கொடுக்காத இன்னருளை இராமானுசர் அடியேனுக்கு ஈந்தார். வேத விரோத மதங்களை, அவ்வேதத்தைக் கொண்டே தம் ஞானத்தால் கண்டித்தவரும், தமது கீர்த்தியாலே இவ்வுலகம் முழுதும் வ்யாபித்தவரும்,எனது கருமங்கள் வேறோடு அறும்படி போக்கினவரும், ஔதார்யமே வடிவுக் கொண்டவருமான எம்பெருமானார்க்கு, இன்னமும் செய்யத் தக்கதாக திருவுள்ளத்தில் ஏதேனும் உண்டோ?

## பாசுரம்-78

கருத்திற் புகுந்துள்ளிற் கள்ளம் கழற்றி* கருதரிய
வருத்தத்தினால் மிக வஞ்சித்து* நீயிந்த மண்ணகத்தே
திருத்தித் திருமகள் கேள்வனுக்காக்கியபின் என்னெஞ்சில்
பொருத்தப்படாது* எம்மிராமானுச! மற்றோர் பொய்ப்பொருளே.

### பாசுரக் கருத்து

இங்ஙனம் தமக்குச் செய்தருளிய உபகாரங்களை அநுஸந்தித்த பிறகு, தம்மைத் திருத்துவதற்காக அவர் பட்ட வருத்தங்களைச் சொல்லி இப்படி என்னைத் திருத்தித் தேவரீருக்கு உகந்த விஷயமான திருமகள் கேள்வனுக்கு உறுப்பாக்கின பின்பு, வேறு ஒரு பொய்ப் பொருளை என் நெஞ்சில் பொருந்துமாறு செய்ய இயலாது என்கிறார்.

### பதவுரை

எம் நெஞ்சில் பொருத்தப்படாது :
இவ்விதம் சிரமப்பட்டு உம்மால் திருத்தப்பட்ட பின்னர்,திருந்திய எனது மனம் வேறு எதிலும் ஈடுபடாது.

### பாசுர அர்த்தம்

எம்பெருமானாரே! நீர் எண்ண முடியாத சிரமங்களுடன் என் நெஞ்சில் புகுந்து, நான் புறக்கணித்தும், என்னை ஏமாற்றி, உள்ளேயிருந்த ஆத்மாபஹார தோஷத்தைப் போக்கி, இந்த லோகத்திலே அடியேன் திருமாலுக்கு ஆளாம்படி பண்ணின பின்பு, இதற்கு மாறான வேறு எந்த தப்பு விஷயமும், என் மனத்தில் பொருந்த மாட்டாது.

---